**முதன்மை சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்**

**அசல் வழக்கு எண்.275/2024**

2025ம் ஆண்டு **செப்டம்பர் மாதம் 10–ம் தேதி** வாதி தரப்பு சாட்சி **வா.சா.1–ன்** வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சத்யா பிரியா | வா.சா | 1 |
| த/க/பெயர் | ராஜசேகர் | தொழில் | பைனான்ஸ் |
| கிராமம் | ஈரோடு | வட்டம் | ஈரோடு |
| வயது | 48 | நாள் | 10.09.2025 |

**முதல் விசாரணை:–**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். நான் இந்த வழக்கில் என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் தெரியும், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்று, அதில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை முறையே கீழ்கண்டவாறு குறியீடு செய்து, வழக்குரையில் கோரியுள்ளவாறு பரிகாரம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1) 18.11.2010 தேதியிட்ட வாதி பெயரிலுள்ள கிரய ஆவணம் சான்றிட்ட நகல் **வா.த.சா.ஆ.1 ஆகவும்,**

2) 23.07.2024 தேதியிட்ட பட்டா எண்.350–க்கு உண்டான கணினி பட்டா **வா.த.சா.ஆ.2 ஆகவும்,**

3) 20.11.2019 தேதியிட்ட கருவேப்பம்பட்டி பஞ்சாயத்து மூலமாக வாதி பெயருக்கு வழங்கப்பட்ட கட்டிட அனுமதி கடிதம் **வா.த.சா.ஆ.3 ஆகவும்,**

4) 27.06.2024 தேதியிட்ட கருவேப்பம்பட்டி பஞ்சாயத்திற்கு வாதி செலுத்திய சொத்து வரி ரசீது **வா.த.சா.ஆ. 4ஆகவும்,**

5) 17.05.2023 தேதியிட்ட வாதி பெயரில் க.எண்.5/113சி–க்கு செலுத்தப்பட்ட வீட்டு வரி ரசீது **வா.த.சா.ஆ. 5ஆகவும்,**

6) 26.03.2020 தேதியிட்ட வாதி பெயரில் மின்கட்டணம் செலுத்தியதற்கான கணினி வழி ரசீது **வா.த.சா.ஆ. 6ஆகவும்,**

7) வாதி பிரதிவாதிக்கு எதிராக விவாகரத்து கோரி ஈரோடு குடும்ப நல நீதிமன்றத்தில்

தாக்கல் செய்த எப்சிஓபி.எண்.342/2024 மனு நகல் **வா.த.சா.ஆ. 7 ஆகவும்,** ஆகியவற்றை குறியீடு செய்து கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/-M.Ramachandran

Taken down before / by me in the open court and read over / interpreted to the witness and acknolwedged by him / her to be correct.

Sd/.M.Ramachandran,

Principal Subordinate Judge, Tiruchengode.